

ஓசூரில்

# ஆயிர வைசியர் சங்க மாநில செயற்குழு கூட்டம்

ஓசூர்,அக்.23-

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரில் தமிழ்நாடு ஆயிர வைசியர் சங்க மாநில செயற்குழு கூட்டம் நடைபெற்றது. ஓசூர்-கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலை அருகே உள்ள ராயல் வெல்பிட் ஹெரம்ப் இனப் கூட்டரங்கில் நடைபெற்ற இந்த கூட்டத்திற்கு, சங்கத்தின் மாநில தலைவரும், சேலம் விநாயகா மிஷன் நிகர் நிலை பல்கலைக்கழக வேந்தருமான டாக்டர் எ.எஸ். கணேசன் தலைமை தாங்கினார். மாநில செயலாளர் ஜெயராமன், பொருளாளர் ஜெயக்குமார் மற்றும் நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர். ஓசூர் ஆயிர வைசியர் சங்க தலைவர் டாக்டர் கோராமலிங்கம் வரவேற்று பேசினார். மாநில செயல் தலைவர் சங்கரபாண்டியன், துணைத்தலைவர் விஸ்வநாதன், கவுரவ தலைவர் நாகராஜன், கிருஷ்ணகிரி மாவட்ட தலைவர் நடராஜன் என்ற மனோகரன் ஆகியோர் வாழ்த்தி பேசினார்கள். இதில், சமுதாய பாதுகாப்பிற்கான திட்டங்கள் மற்றும் சமுதாய இளைஞர்களின் முன்னேற்ற திட்டம் குறித்து ராமலிங்கம் மற்றும் திருக்கைவேல் ஆகியோர் விரிவாக பேசினார்கள்.

முன்னதாக, மாநில தலைவர் கணேசன் நிருபர்களுக்கு பேட்டியளித்தபோது கூறியதாவது:-

குடும்ப நல உதவிகள், நிவாரண தொகை வழங்குதல், பெண்கள் முன்னேற்றத்திற்கான வளர்ச்சி திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை செயல்படுத்த திட்டமிட்டுள்ளோம். இது தொடர்பாக இந்த கூட்டத்தில், சங்க நிர்வாகிகளுடன் கலந்து ஆலோசனை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

இந்த கூட்டத்தில் ஓசூர் நகர துணைத்தலைவர் வக்கீல் பாலகிருஷ்ணா மற்றும், மாவட்ட, நகர நிர்வாகிகள், ஆயிர வைசியர் சமுதாயத்தை சேர்ந்த ஆண்கள், பெண்கள் திரளாக கலந்து கொண்டனர்.

## நாகரசம்பட்டி பகுதியில்

மளத்தம்பட்டிபுதூரில்

## வேளாண்மை கல்லூரி மாணவர்களின்